# சுபீட்சம்

SUPEEDSAM – EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

வியாழக்கிழமை 21.10.2021 | supeedsam.com | supeedsam@gmail.com







# இன்று அதிபர் லீவு என்றால் திறப்பை வலயக் கல்விபணிமனையில் ஒப்படைக்கவேண்டும்!

## கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் புள்ளநாயகம் அறிவிப்பு!



(வி.ரி.சகாதேவராஜா)

கொரோனா நீண்ட விடுமுறையின்பின்பு, கிழக்கில் இன்று (21) வியாழக்கிழமை 568 பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படுகின்றன. இன்று அதிபர் யாராவது லீவு அறிவித்தால், அவர் பாடசாலைத்திறப்பையும் ஆவணங்களையும் அந்தந்த வலயக்கல்விப்பணிமனையில் ஒப்படைக்கவேண்டும் என்று கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் அறிவித்துள்ளார்.ச

02 ஆம் பக்கத்தில்...

# அதிபர் ஆசிரியர்கள் இன்றும் நாளையும் பகிஸ்கரிப்பில் ஈடுபடவேண்டும்

அதிபர் ஆசிரியர்கள் இன்று மற்றும் நாளை பணிக்கு செல்லாமல் பணிப்பகிஷ்கரிப்பு செய்ய வேண்டுமென இலங்கை ஆசிரியர் சங்கத்தினுடைய உபதலைவர் தீபன் தீலீசன் கேட்டுக் கொண்டுள்ளார்.

பாடசாலைகள் நாளை திறக்கப்படவுள்ள நிலையில், இன்று மதியம் செய்தியாளர்களை சந்தித்துப் பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

# எமது போராட்டத்தை நிறுத்தபோவதில்லை

## ஆசிரியர் விடுதலை முன்னணி தெரிவிப்பு



(தலவாக்கலை பி.கேதீஸ்)

எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் அதிபர்,ஆசிரியர்களின் போராட்டத்தை வேறு வடிவத்தில் முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம் என ஆசிரியர் விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் என்.டி.எஸ்.நாதன் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் பாடசாலைகளை இன்று வியாழக்கிழமை திறப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

# காணி அபகரிப்புக்கு எதிராக வந்தாறுமூலை மக்கள் ஆர்ப்பாட்டம்





(சுபீட்சம் நிருபர்)

மட்டக்களப்பு வந்தாறுமூலை பகுதியில் நீண்டகாலமாக விளையாட்டு மைதானமாக பாவிக்கப்பட்டுவந்த காணியை சிலர் அபகரிக்க முற்படுவதாக தெரிவித்து அப்பகுதியில் உள்ள மக்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வந்தாறுமூலை கிழக்கு தேவாபுரம் என்னும் பகுதியில் உள்ள மக்களே இன்று கவன ஈர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

02 ஆம் பக்கத்தில்...

# போலிஸாருடன் இணைந்தே சட்டவிரோத மணல் அகழ்வு

(ஜூட்)

வடமராட்சி கிழக்கில் பொலிஸாருடன் இணைந்தே சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் குற்றஞ்சாட்டினார்.


மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறும் இடங்களுக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்ட பின்னர் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

02 ஆம் பக்கத்தில்...

# ஒற்றையாட்சியின் கீழ் எங்கள் வளங்கள் பறிபோகின்றன

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து இராணுவத்தை வெளியேற்றினால் தான் தமிழர் தாயகம் தப்பும். தற்போது அடிமை நாடாக மத்திய அரசாங்கம் வடக்கு கிழக்கை போரின் பின் நிர்வகித்து வருகிறது என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர், க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு வாராந்தம் அனுப்பும் கேள்வி பதில் குறிப்பிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.



02 ஆம் பக்கத்தில்...






# நீராடச் சென்ற காத்தான்குடியைச் சேர்ந்த தந்தையும் இரு பிள்ளைகளும் பலி

வெல்லவாய எல்லவெல நீர்வீழ்ச்சியில் நீராடச் சென்ற தந்தையும் அவரது பிள்ளைகள் இருவரும் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று பிற்பகல் இடம்பெற்ற இச்சம்பவத்தில், காத்தான்குடியைச் சேர்ந்த 35 வயதான தந்தை, அவரது 15 வயது மகன் மற்றும் 9 வயது மகள் ஆகியோரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நாமல் - இந்திய பிரதமர் மோடி சந்திப்பு

இந்தியாவின் உத்தர பிரதேச மாநிலம் குஷிநகர் விமான நிலைய திறப்பு விழாவில் பங்கேற்க இலங்கையில் இருந்து சென்றிருந்த நாமல் ராஜபக்ஷவும் இந்திய பிரதமர் நரேந்திர மோடியும் சந்தித்து பேசியுள்ளனர்.

இலங்கையிலிருந்து சென்ற முதல் விமானத்தில் நாமல் ராஜபக்ச உட்பட நற்றுக்கும் மேற்பட்ட பௌத்த

02 ஆம் பக்கத்தில்...








# பயணக் கட்டுப்பாடு நீடிப்பு

பயணக் கட்டுப்பாடுகளை நீடிக்குமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவுறுத்தியுள்ளார்.

அதன்பிரகாரம் தற்போது அமுலில் உள்ள மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடுகள் எதிர்வரும் 31 ஆம் திகதி அதிகாலை 4.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.



இதனை கொரோனா தடுப்பு செயலணியின் தலைவர் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.




## காணி அபகரிப்புக்கு எதிராக வந்தாறுமூலை மக்கள் ஆர்ப்பாட்டம்

விளையாட்டு மைதானத்தில் ஒன்று கூடிய பொதுமக்கள் கவன ஈர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்ததுடன் வந்தாறுமூலைதேவாபுரம் வீதியை மறித்தும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பொலிஸாரே சட்டத்தினை உரிய முறையில் நடைமுறைப்படுத்து, விளையாடுவதற்கு மைதானம் தரவேண்டும், ஏறாவூர்பற்று பிரதேச சபையே எமக்கான விளையாட்டு மைதானத்தினை பெற்றுத் தாருங்கள், விளையாட்டு மைதானத்திற்கான நிரந்தர தீர்வினை தாருங்கள், 50 வருட எங்கள் உரிமையினை மீறாதே போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஏந்தியிருந்தனர்.

வந்தாறுமூலை கண்ணகி வித்தியாலய மாணவர்கள் மற்றும் அப்பகுதி இளைஞர்கள் நீண்டகாலமாக குறித்த காணியை விளையாட்டு மைதானமாக பயன்படுத்திவரும் நிலையில் அதனை சிலர் தனியார் காணியென கூறி அடைக்க முற்படுவதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 50 வருடத்திற்கு மேலாக குறித்த காணியை தாங்கள் விளையாட்டு மைதானமாக பயன்படுத்திவரும் நிலையில் இன்று தங்களது காணியென கூறி சிலர் அப்பகுதியை வேலியடைக்கும் செயற்பாட்டினை முன்னெடுத்துள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியில் உள்ள பாடசாலைகளுக்கு விளையாட்டு மைதானங்கள் இல்லாத காரணத்தினால் இந்த மைதானத்தையே பயன்படுத்திவரும் நிலையில் குறித்த விளையாட்டு மைதானத்தினை அபகரிக்கும் செயற்பாடுகளை சிலர் முன்னெடுத்து வருவருதாகவும் பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

குறித்த விளையாட்டு மைதானத்தினை புனரமைத்து தருமாறு நீண்டகாலமாக கோரிக்கை விடுத்துவருகின்ற போதிலும் இதுவரையில் அதற்கான எந்த நடவடிக்கையும் முன்னெடுக்காத நிலையில் குறித்த பகுதி விளையாட்டுக்கழகங்கள் மற்றும் பாடசாலை என்பன இணைந்தே புனரமைத்து விளையாட்டு நிகழ்வுகளை நடாத்திவருவதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றர்.

குறித்த விளையாட்டு மைதானத்தினை குறித்த பகுதியில் உள்ள தொழில்நுட்ப கல்லூரி மாணவர்கள்,சமுர்த்தி திணைக்கள உத்தியோகத்தர்கள் உட்பட அரச திணைக்களங்களும் பயன்படுத்திவரும் நிலையிலேயே இந்த விளையாட்டு மைதானத்தினை அபகரிக்க முற்படுவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த விளையாட்டு மைதானத்தினை புனரமைத்து அதனை விளையாட்டு மைதானமாக பிரகடனப்படுத்துவதற்கான செயற்பாட்டினை ஏறாவூர்ப்பற்று பிரதேசசபை முன்னெடுக்க வேண்டும் எனவும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## நாமல் - இந்திய பிரதமர் மோடி சந்திப்பு

பிக்குகள் உத்திரப்பிரதேசம் சென்றனர்.

புத்தரின் புனித நூல்களையும், குஷிநகரில் காட்சிப்படுத்துவற்காக இலங்கையிலிருந்து சென்ற தூதுக்குழு எடுத்து சென்றது.இந்த விஜயத்தில் அமைச்சர் நமல் ராஜபக்சே தலைமையில் ஐந்து அமைச்சர்களும் இடம் பெற்றிருந்தனர்.

இந் நிகழ்ச்சியில் பேசிய நமல் ராஜபக்ச இரு நாடுகளுக்கிடையேயான உறவை வலுப்படுத்த இலங்கைக்கு 50 மில்லியன் டொலர்களை வழங்கியதற்காக பிரதமர் மோடிக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்த நாமல் ராஜபக்ச,தமிழ், ஆங்கிலம் ,சிங்களம் ஆகிய மும்மொழியிலான பகவத் கீதையை பிரதமருக்கு பரிசளித்துள்ளார்.

## பொலிஸாருடன் இணைந்தே சட்டவிரோத

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

‘நீண்ட நாள்களாக சட்டவிரோதமான மணல் கொள்ளை இந்தப் பகுதிகளில் இடம் பெற்று வருகின்றது. குறிப்பாக நான் ஒரு முறை எனது வாகனத்தில் வரும்போது கடத்தல்காரர்கள் என்னைக் கண்டதும் தமது வாகனத்தை திருப்பிக்கொண்டு சென்றதை நேரடியாகக் கண்டேன். அதேபோல் இப்பகுதி மக்கள் மிகவும் அச்சம் அடைந்துள்ளார்கள்.

அதாவது சட்டவிரோத மணல் அகழ்வு தனியார் காணிகளில் இடம்பெற்று வருகின்றது. சட்டவிரோதமாக மணல் அகழ்வு தொடர்பில் பொலிஸாரிடம் தகவல் வழங்கும்போது அவர்கள் நடவடிக்கை எடுப்பதாகக் கூறுகிறார்கள்.

ஆனால், அவ்வாறு முறையிடும்போது மணல் கடத்தல்காரர்களிடமிருந்து பொலிஸாரிடம் முறையிட்டவர்களுக்கு தொலைபேசி அழைப்பு வருகின்றது.

எனவே, பொலிஸாருடன் இணைந்து இந்தச் சட்டவிரோத மணல் கொள்ளை ஈடுபடுவது என்பது நிரூபணமாகின்றது. எனவே, குறித்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்’ என்றார்.

## ஒற்றையாட்சியின் கீழ் எங்கள் வளங்கள் பறிபோகின்றன

குறித்த பதிவில்,

கேள்வி: ஒற்றையாட்சியைத் தமிழ்க் கட்சிகள் விரும்பாததேன்?

பதில்: ஒற்றையாட்சித் தலைமைத்துவம் பெரும்பான்மையினக் கட்சிகள் வசம் இருக்கும் போது சிறுபான்மையினர் பாகுபாட்டுக்கு உள்ளாவார்கள் என்பதால்.

கேள்வி: பெரும்பான்மையினக் கட்சிகளில் சிறுபான்மையினர் போதிய அளவு இடம் வகித்தால் இந்த நிலைமை எழாதல்லவா?

பதில்: எழும். இலங்கை போன்ற நாடுகளில் எழும். இலங்கையில் பெரும்பான்மையினத் தலைவர்கள் தாழ்வு மனப்பான்மைக்கு உட்பட்டுள்ளார்கள்.

தமது இனம் இலங்கை நாட்டில் பெரும்பான்மை என்றாலும் பக்கத்தில், தமிழ் நாட்டில், பல கோடி தமிழர்கள் வாழ்ந்து வருவதால் தமக்கு எக் காலத்திலும் பாதிப்பு ஏற்படக்கூடும் என்ற எண்ணத்தில் இலங்கை வாழ் சிறுபான்மையினரைச் சந்தேகக் கண் கொண்டு பார்க்கின்றார்கள்.

தமது தாழ்வு மனப்பான்மையின் நிமித்தம் அவர்களை எழ விடாமல் தடுக்க வேண்டும் என்று சிந்திக்கின்றார்கள். அதனால் தம்முடன் சேரும் சிறுபான்மை இன மக்களையும் அவர்களே வழிநடத்துகின்றார்கள்.

சிறுபான்மை உறுப்பினர்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துகின்றார்கள். இதற்கு நல்ல உதாரணம் இதுவரை காலமும் பெரும்பான்மைக் கட்சிகளுடன் சேர்ந்து பயணித்த தமிழ்த் தலைவர்களே. பாகுபாட்டுக்குட்படும் சிறுபான்மையினரை அவர்களால் சட்ட ரீதியாகக் காப்பாற்ற முடியாது போய்விட்டது.

தனிப்பட்டவர்களை அவர்கள் காப்பாற்ற முடியும். ஆனால் இனங்களின் உரித்துக்களைப் பெற்றுத் தரமுடியாது. எனவே ஒற்றையாட்சியில் பெரும்பான்மையினரின் சிந்தனைகளே மேலோங்கி நிற்பன.

ஆனால் சிந்திக்கும் திறன் கொண்ட, பாகுபாட்டுச் சிந்தனைகளுக்கு இடம் கொடுக்காத, மனித உரிமைகள் மீது பற்று கொண்ட, நியாய சிந்தனை பெற்ற பெரும்பான்மைத் தலைவர்கள் ஒரு நாட்டிலிருந்தால் அவர்கள் தாமாகவே சிறுபான்மை இன மக்களைக் காப்பாற்றும் வகையில் அவர்களின் உரித்துக்களைப் பாதுகாக்கும் வகையில் சட்டம் இயற்றுவார்கள்.

அதாவது அதிகாரப் பகிர்வை மேற்கொண்டு சிறுபான்மையர் பெருவாரியாக வாழும் இடங்களில் அவர்கள் தங்களைத் தாங்களே ஆள வழிவகுப்பார்கள்.

ஆனால் பொதுவாக இன்றைய சிங்கள மக்கட் தலைவர்கள் இன ரீதியான சிந்தனைகளிலேயே ஊறியிருக்கின்றனர். அதற்கு முக்கிய காரணம் சிங்களவர் பற்றிய உண்மை வரலாற்றை அவர்கள் உணராததாலேயே.

தமிழ் மக்களின் தொன்மை பற்றி அவர்கள் அறியாததாலேயே. ஆகவே அவர்களின் தலைமைத்துவத்தில் செயற்படுகின்ற ஒற்றையாட்சி தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்காது.

ஒற்றையாட்சியின் கீழ் தமிழ் மக்களின் பாரம்பரிய தாயக நிலங்கள் பறிபோவன. தற்போது அது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

பதில் : நிச்சயமாக! அதிகாரப் பகிர்வுக்குச் செயல்வடிவம் கொடுப்பது சமஷ்டி அரச முறையே.

கேள்வி : ஆனால் உங்கள் கட்சி கூட்டு சமஷ்டியை கோரியுள்ளதே?

பதில் : ஆம்! கூட்டு சமஷ்டி முறை கூடிய அதிகாரங்களை அலகுகளுக்கு அல்லது பிராந்தியங்களுக்கு வழங்கும். அதாவது கூட்டு சமஷ்டி என்பது தனித்துவமான நாடுகள் பலவற்றை நிரந்தரமாக சில காரணங்கள் கருதி ஐக்கியப்படுத்துவதேயாகும்.

தமிழ் பேசும் பிரதேசங்கள் 1833 வரை தனித்துவ ஆட்சிகளாகவே இருந்து வந்தன. சமஷ்டி முறையில் மத்திய அரசின் உள்ளீடு வெகுவாக இருக்கும். ஆனால் கூட்டு சமஷ்டியில் தனி அலகுகள் தம்மைத் தாமே ஆண்டு கொண்டு ஒரு சில காரணங்களுக்காக மட்டுமே மத்தியுடன் ஒத்துழைக்கும் விதத்தில் அமைவன.

சமஷ்டி, கூட்டு சமஷ்டி இடையேயான வேற்றுமைகளைக் கோடிட்டுக் காட்டுவது சிரமம். ஆனால் பொதுவாக மத்திய அரசாங்கமானது கட்டுப்படுத்தப்பட்ட குறைந்த அதிகாரங்களையே கூட்டு சமஷ்டியில் பெற்றிருக்கும். நாட்டின் பாதுகாப்பு, வெளியுறவுக் கொள்கைகள் மேலும் சில சில்லறை அதிகாரங்கள் போன்றவை மத்தியிடம் இருப்பன.

ஒரு விசேட அம்சமாகக் குறிப்பிடுவதென்றால் மத்திய அரசாங்கத்திற்குக் கூட்டு சமஷ்டியின் கீழ் நேரடியாக இறைவரியை தனிக் குடிமக்களிடம் இருந்து பெற முடியாது.

பதிலாக அவற்றைப் பிராந்திய அரசாங்கங்கள் மூலமாகவே பெற வேண்டியிருக்கும். நாட்டின் தனி மனிதர்களை ஆட்டிப்படைக்கும் அதிகாரம் மத்திய அரசாங்கத்திற்கு இருக்காது.

தற்போது ஒற்றையாட்சியின் கீழ் எங்கள் வளங்கள் பறி போகின்றன. காணிகள் பறி போகின்றன. மக்கள் வறுமையின் விளிம்பில் நின்று தத்தளிக்கின்றார்கள்.

ஆனால் தாம் செய்த தவறுகளிற்காக இறைவரிகள் மூலமாக எம்மை வருத்தி வருகின்றனர். கூட்டு சமஷ்டி முறை இவை யாவற்றையும் முடிவுக்குக் கொண்டு வரும்.

கேள்வி : அப்படியானால் மத்திய இராணுவத்தை பிராந்தியங்களிலிருந்து வெளியேற்றலாமா?

பதில் : கட்டாயமாக! வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து இராணுவத்தை வெளியேற்றினால் தான் தமிழர் தாயகம் உய்யும்.

தற்போது அடிமை நாடாக மத்திய அரசாங்கம் வடக்கு கிழக்கைப் போரின் பின் நிர்வகித்து வருகின்றது. உள்நாட்டுப் பிராந்திய பாதுகாப்பு கூட்டு சமஷ்டியில் பிராந்தியங்களுக்கே வழங்கப்படும். நாம் எம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் காலம் வரும்.

பொலிஸ் உரித்துக்கள், காணி உரித்துக்கள், பிராந்திய உள்நாட்டுப் பாதுகாப்பு அனைத்தும் பிராந்திய அலகுகளுக்கே வழங்கப்படும்.

இன்று படையினர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போரின் பின்னர் தொடர்ந்து இருப்பதால் பல பாதிப்புகளுக்கு நாம் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

1. எமது வாழ்வாதாரம் தடைப்படுகின்றது. எமது நிலங்களை இராணுவம் பயன்படுத்தி இலாபம் பெறுகின்றார்கள்.

2. எமது சுதந்திரம் தடைப்படுகின்றது. மக்கள் இராணுவம் முகாம் இட்டிருக்கும் இடங்களினூடாகப் பயணிக்க அஞ்சுகின்றார்கள். சுற்று வட்டார பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் அச்சத்தில் வாழ்கின்றார்கள்.

3. தமிழர் தாயக நிலங்கள் பறிபோவதற்குப் படையினரே உறுதுணையாக நிற்கின்றார்கள். பல்லாயிரம் ஏக்கர் நிலங்களைச் சுவீகரித்து உள்ளார்கள்.

4. திணைக்களங்களுடன் படையினர் சேர்ந்து பிறழ்வான வரலாற்றுக் காரணங்களை முன் வைத்து நிலங்களைக் கையேற்கின்றார்கள்.

5. புத்த பிக்குகளுடன் படையினர் சேர்ந்து நிலங்களை ஆக்கிரமிக்கின்றனர்.

6. பௌத்த வணக்க ஸ்தலங்களைப் பௌத்தர்கள் அல்லாத இடங்களில் நிர்மாணிக்கப் படையினர் உதவி புரிந்து வருகின்றனர்.

7. படையினர் வடமாகாண மக்களின் நடமாட்டங்கள், எவர் எவருடன் அவர்கள் உள்ளூரில் தொடர்பு வைத்துள்ளார்கள், மற்றும் அவர்களுக்கு யார் யாருடன் வெளிநாட்டிலும் தொடர்பு இருக்கின்றது என்பவை சம்பந்தமான முழு விபரங்களையும் சேகரிக்கின்றார்கள். இவை உத்தியோகபூர்வ காரணங்களுக்கே என்று நாம் நினைக்கக் கூடும். ஆனால் பணம் பறித்தல், கடத்தல் போன்ற பல காரியங்களுக்கும் இவ்வாறான தரவுகள் பாவிக்கப்படுகின்றன.

8. இங்குள்ளவர்கள் வெளிநாட்டுத் தமிழர்களுடன் தொடர்பு கொள்ளும் போது அவர்கள் புலிகள் இயக்கத்துடன் முன்னர் தொடர்புடையவர்கள் என்று கண்டால் உடனே இங்குள்ளவர்களைப் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப் படையினர் உதவுகின்றார்கள்.

9. உள்ளூர் மக்கள் பலரின் வறுமையைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு சில நன்மைகளைச் செய்து அவர்களைத் தமது கையாட்களாகத் தமிழ் மக்களுக்கு எதிராக மாற்றுகின்றார்கள்.

10. இன்று மத்திய அரசாங்கக் கட்சிகளின் மக்கள் பிரதிநிதிகளாக வட கிழக்கு மாகாணங்களில் வலம் வருபவர்கள் படையினர் இங்கு வேரூன்றி நிற்கின்றார்கள் என்ற ஒரே ஒரு பலத்தின் நிமித்தமாகவே அவ்வாறு வலம் வருகின்றார்கள்.

அரச பலம் என்பது இவர்களுக்கு இங்கு முகாம் இட்டிருக்கும் படையினர் மூலமே கிடைக்கின்றது. படையினர் வடக்கு, கிழக்கிலிருந்து வெளியேறி விட்டால் அரச கட்சிகளின் பிரதிநிதிகளின் இருப்பு கேள்விக்கிடமாகிவிடும்.

அது மட்டுமல்ல. தெற்கிலிருந்து இழுவைப்படகுகள் இங்கு வந்து எமது கடல் வளங்களைச் சூறையாடுவது நின்று விடும். திணைக்களங்கள் எமது மக்களின் தாயக நிலங்களைக் கையேற்பது நின்று விடும். புத்த பிக்குகள் பௌத்த வணக்க ஸ்தலங்களை எதேச்சாதிகாரமாக வடக்கு, கிழக்கில் நிறுவுவது நின்று விடும்.

வடக்கு, கிழக்கில் சிங்களக் குடியேற்றங்கள் நின்றுவிடுவன. இதுவரையில் கைப்பற்றப்பட்ட நிலங்கள் திரும்பப் பெறக் கூட்டு சமஷ்டி முறை வழி வகுக்கும். படையினர் தொடர்ந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருப்பதால் இன்னும் எத்தனையோ விபரீதங்கள் நடைபெறுகின்றன.

இவை யாவற்றையும் முறியடிக்க வேண்டுமானால் கூட்டு சமஷ்டி எமக்கு அவசியம். ஒற்றையாட்சியின் கீழ் ி இராணுவமே வெளியேறு என்றால் அடுத்த நிமிடமே எம்மைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்து விடுவார்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## இன்று அதிபர் லீவு என்றால் திறப்பை வலயக் கல்விபணிமனையில்

நேற்று, அவர் சகல வலயக்கல்விப்பணிப்பாளர்களுக்கும் அனுப்பியுள்ள அவசர அறிவுறுத்தல் கடிதத்தில் இதனைக்குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறு ஒப்படைக்கப்படும் திறப்பும் ,ஆவணங்களும் குறித்த பாடசாலையின் பாடசாலை மேம்பாட்டுத்திட்ட இணைப்பாளரிடம் (PSI Coordinator)கையளிக்கப்பட்டு, கோட்டக்கல்விப்பணிப்பாளர் (D.E.O)பாடசாலை இன்று மீளத்திறப்பதற்கான சகல ஏற்பாடுகளையும் மேற்கொள்ளவேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது.

மாகாணத்தில் 200மாணவர்களுக்கு குறைந்த ஆரம்பவகுப்புக்களைக்கொண்ட 568பாடசாலைகள் இன்று மீளத்திறக்கப்படவிருக்கின்றன. அதிபர் சமுகமளிக்காத பாடசாலைகளை, அந்தந்த பாடசாலைப்பொறுப்பு மேம்பாட்டுத்திட்ட இணைப்பாளர்கள் திறந்து மாணவர்களுக்கான சூழலை ஏற்படுத்தவேண்டும்.

இது பற்றிய குறிப்பை பாடசாலையின் சம்பவத்திரட்டுப் புத்தகத்தில் (LogBook)கோட்டக்கல்விஅதிகாரி முன்னிலையில் இணைப்பாளர் முறைப்படி பதிய வேண்டும். அதிபர் திரும்பும்வரை ,குறித்த இணைப்பாளர் அந்தந்த பாடசாலையின் பாடசாலை அபிவருத்திக்குழுவினர், சுகாதாரக்குழுவினர் மற்றும் பாடசாலை கட்டாயக்கல்விக்குழுவினரோடு கலந்துரையாடி பாடசாலை நடவடிக்கைளை முன்னெடுக்க வேண்டும்.

பட்டதாரி பயிலுனர்களை பாடசாலையில் இணைத்து ஆசிரியர்கள் சகலவகுப்புகளிலும் இருக்கத்தக்கவாறு நடவடிக்கைகளை வலயக்கல்விப்பணிப்பாளர்கள் மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.




## எமது போராட்டத்தை நிறுத்தபோவதில்லை

ஆனால் இன்றும் நாளையும் அதிபர்,ஆசிரியர்களின் போராட்டம் தொடரும். பாடசாலைகளை இன்று முதல் கட்டம் கட்டமாக திறப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ள போதும் இன்று 21ம் திகதியும் நாளை 22ம் திகதியும் அதிபர்,ஆசிரியர்கள் கடமைக்கு சமூகமளிக்க போவதில்லை என ஒன்றிணைந்த அதிபர்,ஆசிரியர் சங்கங்கள் தீர்மானம் எடுத்துள்ளோம்.

எதிர்வரும் 25ம் திகதி முதல் பாடசாலைகளுக்கு சென்று கற்பித்தலில் ஈடுபடுவதற்கு முடிவு எடுத்துள்ளோம். அந்தவகையில் எதிர்வரும் 25ம் திகதி முதல் போராட்டத்தை வேறு வடிவத்தில் முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம்.

நாடளாவிய ரீதியில் அதிபர்,ஆசிரியர்கள் உள்ளிட்ட கல்விசார் ஊழியர்களும் கல்விசாரா ஊழியர்களும் சம்பள முரண்பாடு உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுத் தருமாறு கடந்த 24 வருடங்களாக கோரி வருகின்றோம். ஆனால் அதிபர்,ஆசிரியர்களின் போராட்டங்களின் நியாயப்பாடுகளை முழுமையாக விளங்கிக்கொண்டும் அரசு தொடர்ந்து இழுத்தடிப்புச் செய்து வருகின்றது. இப்பிரச்சினைக்கு தீர்வு காணுமாறு வலியுறுத்தி மூன்று மாதங்களுக்கும் மேலாக தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுப்பட்டு வருகின்றோம். ஆனால் சம்பள முரண்பாட்டுக்கான தீர்வை அரசாங்கம் இதுவரை வழங்கவில்லை. எனவே எமக்கு நியாயமான தீர்வு கிடைக்கும்வரை நாம் போராட தயாராக இருக்கின்றோம்.

இன்றும் நாளையும் நாங்கள் பணிப் பகிஸ்கரிப்பை நடத்துவோம். எனினும் எதிர்வரும் 25 ஆம் திகதி பாடசாலைக்கு சமூகமளிப்போம். அன்று முதல் மாணவர்களுக்கான கற்பித்தல் நடவடிக்கைகளை முன்னெடுப்போம். காலை 8 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மட்டுமே எமது பணி இடம்பெறும். மேலதிக கடமைகள் இடம்பெறாது.

2 மணிக்கு பின்னர் பாடசாலைகள் அமைந்துள்ள பிரதேசத்துக்கு அருகாமையில் இருக்கும் நகரங்களில் பெற்றோருடன் இணைந்து அடையாள ஆர்ப்பாட்டங்களை நடாத்தவுள்ளோம். அதிபர்,ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கான தீர்வை அரசாங்கம் வழங்கும் வரை பல்வேறு வடிவில் எமது போராட்டம் தொடரும் என்றார்.

## அதிபர் ஆசிரியர்கள் இன்றும் நாளையும்

அரசியல்வாதிகளுடனும் அரசோடு சேர்ந்து இயங்குகின்ற ஒரு சில அமைப்புகளும் சங்கங்களும் 21 ஆம் திகதி பாடசாலைக்குச் செல்வதென அறிவித்திருந்தாலும் அதிபர்களும், ஆசிரியர்களும் எங்கள் உரிமைக்காக பணியை பகிஸ்கரித்து இந்த போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம்.

அந்த வகையிலே 21, 22ம் திகதி பாடசாலைகள் அனைத்திற்கும் அதிபர் ஆசிரியர்கள் விடுமுறையை அறிவிக்காமல் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி எந்தவித அச்சமுமின்றி அனைத்து அதிபர் ஆசிரியர்களும் இப்போராட்டத்தில் பங்கேற்க வேண்டும்.

பகிஸ்கரித்தால் சம்பளத்தை நிறுத்துவோமென கூறினாலும் அவற்றை சட்ட ரீதியாக செயற்படுத்த முடியாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

பகிஸ்கரிப்பு நடைபெறும் பொழுது அதனால் ஏற்படுகின்ற பாதிப்புகள் தொடர்பாக எந்த சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தொடர முடியாது என்ற சட்ட ஏற்பாடு காணப்படுகிறது. அரசாங்கம் ஆசிரியர் அதிபர்களோடு தொடர்புபடாத யாரை வைத்து பாடசாலைகளை ஆரம்பித்தாலும் அதிபர் ஆசிரியர்கள் பாடசாலைக்கு செல்லாத இடத்தில் எந்த விதமான பாதிப்புக்களும் ஆசிரியர் அதிபர்களுக்கு ஏற்படப் போவதில்லை.என்பதை நாங்கள் பொறுப்புடன் கூறிக்கொள்கிறோம்.

இந்த இடத்திலேயே 21ம்22ம் திகதிகளில் பகிஸ்கரிப்பினை மேற்கொண்டு 25ஆம் திகதி நாங்கள் பாடசாலைக்கு செல்ல தயாராகவுள்ளோம் என தீபன் தீலீசன் தெரிவித்துள்ளார்.

# கிழக்கு மாகாண பாதுகாப்பு படை தலைமையகத்தின் படைத் தளபதியால் ஆலையடிவேம்பில் வீடு திறந்து வைப்பு







**(வி.சுகிர்தகுமார்)**

இராணுவத்தின் மனிதாபிமான ஆளனி உதவியுடன் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் மீள்குடியேற்ற அமைச்சினூடாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்மாணிக்கட்ட வீடு இருந்து திறந்து வைக்கப்பட்டு பயனாளியிடம் கையளிக்கப்பட்டது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவின் மகாசக்தி கிராமத்தில் வறுமைக்குட்பட்ட சித்த சுவாதீனமுற்ற தாயுடன் குடிசையொன்றில் வாழ்;ந்து வந்த இளம் யுவதி ஒருவருக்காக இராணுவத்தினரின் ஆளனி மற்றும் மேலதிக நிதியுதவியுடன் பூர்த்தி செய்யப்பட்ட வீடொன்றே இன்று கையளிக்கப்பட்டது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன் தலைமையில் இடம் பெற்ற வீடு திறப்பு விழாவில் கிழக்கு மாகாண பாதுகாப்பு படை தலைமையகத்தின் பாதுகாப்பு படைத் தளபதி மேஜர் ஜெனரல் சி.டி.வீரசூரிய பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் மாகாண கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ஏ.சி.லமாகேவா, 241 ஆம் படைப்பிரிவின் கட்டளை அதிகாரி பிரிகேட் கொமான்டர் ஏ.சி.அபயகோன், நீத்தை முகாம் பொறுப்பதிகாரி லெப்டினன் கேணல் டபிள்யு டி. என்.டி. வீரசிங்க உள்ளிட்ட இராணுவ உயர் அதிகாரிகள் பிரதேச செயலக அதிகாரிகள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிலையில் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவிலும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக மீள்குடியேற்ற அமைச்சினூடாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட 10 இலட்சம் பெறுமதியான 55 வீடுகளும் 6 இலட்சம் பெறுமதியான 24 வீடுகளும் அமைக்கும் பணி இடம்பெற்று வருகின்றன.

இதற்கமைய குறித்த வீடமைப்பிற்கான ஆளனி உதவிகள் அக்குடும்பத்தில் இல்லாத நிலையில் இராணுவத்தின் ஆளனி உதவியுடன் வீட்டினை நிர்மாணிப்பதற்கான பொறுப்பினை இராணுவம் பொறுப்பேற்று நடைமுறைப்படுத்தி நிறைவு செய்துள்ளது.

இவ்வாறு பூர்த்தி செய்யப்பட்ட வீடு திறப்பு விழாவில் கலந்து கொள்ள வருகை தந்த கிழக்கு மாகாண பாதுகாப்பு படை தலைமையகத்தின் படைத் தளபதியை பிரதேச செயலாளர் உள்ளிட்டவர்கள் வரவேற்றனர். தொடர்ந்து படைத் தளபதி மற்றும் வீட்டின் உரிமையாளர் இணைந்து வீட்டினை திறந்து வைத்தனர். பின்னர் மங்கள விளக்கேற்றியதுடன் வீட்டின் திறப்பும் பயனாளியான இளம் யுவதியிடம் கையளிக்கப்பட்டது.

இதன் பின்னர் மரக்கன்றொன்றும் படைத் தளபதியால் நாட்டி வைக்கப்பட்டது. தொடர்ந்து வீட்டிற்கு தேவையான சில தளபாடங்களை நிந்தவூர் அரச ஆயுர்வேத ஆராய்ச்சி தொற்றா நோய் வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் கே.எல்.எம்.நக்பர் வழங்கி வைத்தார்.

இதேநேரம் அங்கு குழுமியிருந்த பொது மக்களுடன் நட்புறவாக உரையாடிய படைத் தளபதி மக்கள் அனைவரும் தடுப்பூசி பெற்றுக் கொண்டுள்ளனரா எனவும் நலம் விசாரித்தார்.

நிகழ்வில் இராணுவ உயர் அதிகாரிகள் பிரதேச செயலக அதிகாரிகள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

நாட்டில் நிலவும் கொரோனா நிலைக்கு மத்தியிலும் இராணுவத்தினர் ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்ததுடன் இணைந்து மனிதாபிமான பணிகளை தொடர்ந்தும் முன்னெத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# திருமலை குப்புறுப்பிட்டி கனிஷ்ட பாடசாலையில் சிரமதான நிகழ்வும் நிறைவு



**(திருமலை ரவ்பீக் பாயிஸ்)**

கிழக்கு மாகாணத்தில் நாளை முதல் 200க்கும் குறைவான மாணவர்கள் உள்ள அனைத்து பாடசாலைகளும் ஆரம்பிப்பதற்கான அனைத்து வேலைத் திட்டங்களும் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி திருகோணமலை குப்புறுப்பிட்டி கனிஷ்ட பாடசாலையில் அதிபர் ஆசிரியர்கள் பழைய மாணவர் மற்றும் பெற்றோர்கள் இணைந்து சிரமதானம் செய்யப்பட்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் பாடசாலையில் குடிநீர் வசதி கைகழுவும் வசதி மாணவர்களுக்கான வசதிகள் என்பன தொடர்பில் ஆராயப்பட்டு முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் பழைய மாணவர்கள் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்ததுடன் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரியினால் மேற்ப்பார்வை செய்யப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

# திருமலை திரியாய் பகுதியில் விவசாயி ஒருவர் 50 ஏக்கரில் வேளாண்மை செய்கை முன்னெடுப்பு

**(எப்.முபாரக்)**

திருகோணமலை மாவட்டத்தின் திரியாய் பிரதேசத்தில் விவசாயி ஒருவர் தனக்கு சொந்தமான ஐம்பது ஏக்கர் நிலப்பரப்பில் சேதனப் பசளையை பயன்படுத்தி வேளாண்மையை செய்கையை மேற்கொண்டு வருகின்றார்.



ஐம்பது ஏக்கரிலும் வேளாண்மை செய்கை பண்ணப்பட்டுள்ளதோடு வேளாண்மை சிறந்த முறையில் உள்ளதோடு அவ்விவசாயிக்கு விவசாய உத்தியோகத்தர்களினால் ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.

திரியாய் பகுதியைச்சேர்ந்த கே.கிருபராஜா என்கின்ற விவசாயி தனது சேதனப் பசளையை பயன்படுத்தி விவசாயம் மேற்கொள்வது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது:

கடந்த இருபது வருடங்களாக நான் விவசாயம் மேற்கொண்டு வருகின்றேன், எனது சொந்த ஐம்பது ஏக்கர் நிலப்பரப்பில் வேளாண்மை செய்கையை சேதனப் பசளைகளை பயன்படுத்தி மேற்கொள்கின்றேன்.

கடந்த காலங்களில் சிறந்த விளைச்சளை பெற்றுள்ளேன் இம்முறையும் நல்ல விளைச்சளை பெறுவேன் என்கின்ற நம்பிக்கை எனக்குள்ளது.

இரசாயன உரங்களை பயன்படுத்தியும் விவசாயம் செய்ததில் நோய் தாக்கம் அதிகமாக காணப்படுகின்றது, ஆனால் சேதனப் பசளைகள் பயன் பாட்டினால் நோய் தாக்கம் குறைவாக உள்ளது.

நாட்டின் ஜனாதிபதி கூறுகின்றது போல் ஒருதடவை செய்து பாருங்கள் நல்ல விளைச்சளை பெறலாம் என்கின்றார்.

# கிண்ணியாவில் முன்னாள் இராணுவ வீரரோருவர் கைக்குண்டுடன் கைது

**(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ், கதிரவன்)**

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூவரசன் தீவு பகுதியில் கைக்குண்டுடன் சந்தேகநபர் ஒருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் அதே பகுதியைச் சேர்ந்த முன்னாள் இராணுவ வீரரான ராசிக் பரீட் பர்ஹான் (29வயது) எனவும் தெரியவருகின்றது.

சம்பவம் குறித்து தெரியவருவதாவதுகணவனுக்கும் மனைவிக்குமிடையில் குடும்பத் தகராறு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் கணவரான முன்னாள் இராணுவ வீரர் தனது மனைவியை கைக்குண்டை காட்டி பயமுறுத்தியதாக கிண்ணியா பொலிஸ் நிலையத்திற்கு தொலைபேசி மூலம் தெரியப்படுத்தியுள்ளார்.

இந்நிலையில் குறித்த இடத்திற்குச் சென்ற பொலிசார் கைக்குண்டை தமது கண்காணிப்பின் கீழ் எடுத்துள்ளதாகவும் குறித்த கைக்குண்டு இருக்கும் இடத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் நீதிமன்ற அனுமதியைப் பெற உள்ளதாகவும் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட குறித்த நபர் கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.




# பிரதமர் தலைமையில் மீலாதுன் நபி தின தேசிய நிகழ்வு



**(வாஸ் கூஞ்ஞ)**

மீலாதுன் நபி தின தேசிய நிகழ்வு கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் செவ்வாய் கிழமை (19) பிற்பகல் அலரி மாளிகையில் இடம்பெற்றது.

புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. தேசிய மீலாதுன் நபி தின விழா 2021 ஐ முன்னிட்டு நினைவு முத்திரையும், முதல் நாள் உறையும் கௌரவ பிரதமர் தலைமையில் இதன்போது வெளியிடப்பட்டது.

வெகுசன ஊடக அமைச்சர் கௌரவ டலஸ் அழகப்பெரும அவர்கள் குறித்த நினைவு முத்திரை மற்றும் முதல் நாள் உறையை கௌரவ பிரதமருக்கு வழங்கினார். முஹம்மது நபி நாயகம் அவர்களது பிறந்த தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு இதன்போது கௌரவ பிரதமரினால் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கிவைக்கப்பட்டன. நீதி அமைச்சர் கௌரவ அலி சப்ரி அவர்கள் இதன்போது கௌரவ பிரதமருக்கு நினைவு பரிசொன்றை வழங்கிவைத்தார்.

குறித்த சந்தர்ப்பத்தில் வெகுசன ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும, நீதி அமைச்சர் எம்.யூ.எம். அலி சப்ரி, தேசிய மரபுரிமைகள், அரங்குக் கலைகள் மற்றும் கிராமியக் கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் விதுர விகரமநாயக்க, ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில்இ பாராளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், மர்ஜான் ஃபலீல்இ எச்.எச்.எம்.ஹாரிஸ், இஷான் ரஹ~மான்இ நஸீர் அஹமட், அலி சப்ரி ரஹீம் மற்றும் வெளிநாட்டு தூதுவர்கள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் ஜகத் பீ விஜேவீரஇ தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்னஇ முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் இப்ராஹிம் அன்சர் உள்ளிட்ட பலர் கலந்துக் கொண்டனர்.

# கண்டி புதிய ஆயர் வேலன்ஸ் மேண்டிஸ் ஆண்டகை பிரதமருடன் சந்திப்பு

**(வாஸ் கூஞ்ஞ)**

பரிசுத்த பாப்பரசரினால் அண்மையில் கண்டி மறைமாவட்டத்தின் புதிய ஆயராக நியமிக்கப்பட்ட மேதகு வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை (20) கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களை அலரி மாளிகையில் சந்தித்தார்.

கண்டி மறைமாவட்டத்தின் ஆயர் பதவிக்கு மேலதிகமாக சிலாபம் மறைமாவட்ட ஆயராகவும் வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை பணியாற்றி வருகின்றார்.

கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கும், ஆயர் வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகைக்கும் இடையே நட்பு ரீதியான கலந்துரையாடல் இடம்பெற்றது.





SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப் பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக நகைத் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல் பெயர் பெண்டன், மற்றும் அனைத்து நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன் செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch

Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
Tel : 044 2410241
Fax : 044 2410245
sikaramgmbh@gmail.com / www.sikaram.com

Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57

SwissLife Select
சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே, அவதானமாகச் செயற்படுங்கள். உங்கள் கடனுக்கான வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்க கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு கரங் கோர்க்கும் ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65

Allegrotto Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch

Seela Food Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.

5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில் நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59

Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt

# மட்டக்களப்பு இளைஞன் செய்த முன்மாதிரியான செயல்

(ஏறாவூர் நிருபர் நாஸர்)



மட்டக்களப்பு - களுவன் கேணி கடற்கரையில் சிறுவன் ஒருவன் தனது நண்பர்களுடன் நீராடிக் கொண்டிருந்தவேளை கண்டெடுத்த சுமார் இரண்டரை இலட்சம் ரூபா பெறுமதியான தங்கச்சங்கிலியொன்றை ஏறாவூர்ப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்து சமூகத்திற்கான முன்மாதிரியைக் காண்பித்துள்ளார்.

மட்டக்களப்பு - மாவடி வேம்பு பிரதேசத்தைச் சேர்ந்த 16 வயதுடைய இராசதுரை தனுகரன் என்ற இச்சுறுவன் கண்டெடுத்த தங்கச்சங்கிலியை உரிமையாளரிடம் ஒப்படைக்குமாறுகோரி நேற்று காலை ஏறாவூர்ப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கீர்த்தி ஜயந்தவிடம் கையளித்தார்.

இதன்போது பிரதேச கிராம சேவை அதிகாரி வீ. உதயகுமார் மற்றும் சிறுவனின் சின்னம்மா ஆகியோரும் பிரசன்னமாயிருந்தனர்.

குடும்பத்தின் கடைசியான மூன்றாம் பிள்ளையான இவர் குடும்ப வறுமை நிலைகாரணமாக பாடசாலைக் கல்வியைக் கைவிட்டுள்ளதுடன் இவரின் தாயார் மத்திய கிழக்கு நாடு ஒன்றில் வீட்டுப்பணிப் பெண்ணாகப் பணியாற்றிவருகிறார்.

இவர் தனது சக நண்பர்களுடன் கடலில் குளித்துக்கொண்டிருந்தவேளை பொன்னிறமான சங்கிலியொன்றைக் கண்டெடுத்துள்ளார். அது தங்கமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தில் பரிசோதித்து உறுதிசெய்யப்பட்டதைடுத்து பொலிஸ் நிலையத்தின் ஊடாக உரிமையாளரிடம் ஒப்படைக்கவேண்டுமென்ற எண்ணம் தோன்றியதாக அவர் தெரிவித்தார்.

இந்தச்சங்கிலியை எதிர்வரும் 27 ஆந்திகதியன்று ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

# முச்சக்கரவண்டி தீ வைத்து எரிப்பு



(க.ருத்திரன்)

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் புதன் கிழமை (20) அதிகாலை இனந்தெரியாத நபர்களினால் முச்சக்கரவண்டி ஒன்று தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

கூட்டுறவு சங்க குறுக்கு வீதி மீராவேடையில் உள்ள எம்.எல்.எம். நிப்ராஸ் என்பருக்கு சொந்தமான முச்சக்கர வண்டியே இவ்வாறு தீயில் கருகி நாசமாகியுள்ளது.

இன்று அதிகாலை 3 மணி 15 நிமிடமளவில் உறங்கி கொண்டிருந்தவேளை தமது வீட்டு ஜன்னல் கண்ணாடிகள் வெடிப்பு சத்தம் கேட்டு உடைந்ததாகவும் கதவினை திறந்து பார்த்தபோது தமது முச்சக்கர வண்டி தீயில் எரிந்து கொண்டிருப்பதனை கண்டு அயலவர்களை அழைத்து தீயினை அணைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டேன்.

நாளாந்தம் முச்சக்கரவண்டியின் மூலம் உழைக்கும் பணத்தினை கொண்டே லீசிங் கொம்பனிக்கு கடன் செலுத்தி வந்ததாக தெரிவித்தார். குறித்த சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர் தெரிவித்தார். முச்சக்கரவண்டியினை தீயட்டு கொழுத்தியவர் அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் வீட்டுச் சுவரில் அனாமதேய கடிதத்தினை ஒட்டிவிட்டு சென்றுள்ளார். சும்பவ இடத்திற்கு மட்டக்களப்பு தடயவியல் பொலிசார் வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

# அக்கரைப்பற்றில் மீலாத் விழா நிகழ்வு



(எம்.ஏ.றமீஸ்)

இஸ்லாத்தின் இறுதித்தூதர் முகம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பிறந்த தினத்தினையொட்டி அக்கரைப்பற்று மீரா நகர் பிரதேசத்தில் அமையப் பெற்றுள்ள மஸ்ஜிதுல் மீராவில் ஏற்பாடு செய்யப்பட்ட விஷேட சமைய நிகழ்வும் அன்னதான வைபவமும் நேற்று (20) மீரா மஸ்ஜித் வளாகத்தில் இடம் பெற்றது.

மஸ்ஜிதுல் மீரா நம்பிக்கையாளர் சபைத் தலைவர் பி.ரி.செய்னுலாப்தீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது சமயத் தலைவர்கள், பள்ளிவாசல்களின் நம்பிக்கையாளர்சபை பிரதிநிதிகள், துறைசார் முக்கியஸ்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

அக்கரைப்பற்று பிரதேச செயலகம் மற்றும் முஸ்லிம் சமய கலாசார திணைக்களம் ஆகியவற்றின் அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்களுக்கமைவாக மஸ்ஜிதுல் மீரா பள்ளிவாசலுக்காக வழங்கப்பட்ட வேலைத் திட்டத்தின் கீழ் இப்பள்ளிவாசல் மூலம் சுமார் 1200 இற்கு மேற்பட்ட மக்களுக்கு அன்னதான நிகழ்வு இடம் பெற்றதுடன், சமயத்தின் மூலம் சமூக ஒற்றுமையினை கட்டியெழுப்பும் வகையில் அக்கரைப்பற்று பிரதேசத்தினை அண்டியுள்ள பிற மதத்தவர்களின் அநாதை இல்லங்கள், முதியோர் இல்லங்கள் போன்றவற்றில் உள்ளவர்களுக்கு அன்னதான நிகழ்வு சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இடம் பெற்றது.

இதேவேளை, அக்கரைப்பற்று மீரா பள்ளிவாசலில் விஷேட அல்-குர்ஆன் தமாம் வைபவம், மஜ்லிஸ் நிகழ்வு மற்றும் விஷேட மார்க்க சொற்பொழிவு போன்றன இடம்பெற்துடன், இறைத்தூதர் முகம்மது நபி அவர்கள் இவ்வுலக மக்களுக்காக காட்டித் தந்த வாழ்க்கை வழிமுறைகள் பிரகாரம் அனைத்து இனத்தவர்களும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுப்புடனும் ஒற்றுமையாகவும் வாழ்ந்து அனைத்து பிரச்சினைகளில் இருந்தும் உலக மக்கள் விடுபட்டு நிம்மதியுடன் வாழ்வதற்காக விஷேட துஆப் பிராந்தனையும் இதன்போது இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# பாவனையாளர் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்களை மீளவும் பிரதேச செயலகங்களுக்கு நியமிக்க கோரிக்கை



(அஸ்லம் எஸ்.மௌலானா)

மாவட்ட செயலகங்களில் இணைப்புச் செய்யப்பட்டிருக்கும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு விசாரணை உத்தியோகத்தர்களை மீளவும் பிரதேச செயலகங்களுக்கு நியமிப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென தென்கிழக்கு சமூக அபிவிருத்தி மன்றம் கோரிக்கை விடுத்துள்ளது. இக்கோரிக்கையை வலியுறுத்தி வர்த்தக, வாணிப அமைச்சர், பாவனையாளர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் போன்றோருக்கு கடிதங்களை அனுப்பி வைத்திருப்பதாக மன்றத்தின் செயலாளரும் இலங்கை கல்வி நிருவாக சேவையின் ஓய்வுநிலை கல்விப் பணிப்பாளருமான ஏ.எல்.முகம்மது முக்தார் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த 2018 ஆம் ஆண்டு, அமைச்சரவை, முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மற்றும் திறைசேரி என்பவற்றின் அனுமதியுடன் பிரதேச செயலக மட்டத்தில் நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்கும் நோக்குடன் நாடு பூராவும் சுமார் 200க்கு மேற்பட்ட புலனாய்வு விசாரணை உத்தியோகத்தர்கள், வர்த்தக அமைச்சினால் நியமனம் செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு நியமனம் செய்யப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களும் நியமன நிபந்தனைகளுக்கு முரணான வகையில் திடீரென மாவட்ட செயலகங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டு, அங்கிருந்து கடமை செய்யுமாறு பணிக்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாக அவர்களது புலனாய்வு பணிகளை சுதந்திரமாக செய்ய முடியாத நிலை உருவாகியுள்ளது.

தற்போதைய கொவிட் பெருந்தொற்று அசாதாரண சூழ்நிலையில் வர்த்தகர்கள் தாம் நினைத்தவாறு பொருட்களின் விலையை அதிகரித்து விற்பனை செய்வதற்கும் கறுப்பு சந்தை, பதுக்கல் வியாபாரம் என்பவற்றில் ஈடுபடுவதற்கும் பிரதான காரணம் யாதெனில் பிரதேச செயலக மட்டத்தில் பொறுப்புக்கூற வேண்டிய பாவனையாளர் அதிகார சபை அதிகாரிகள் இல்லாமல் போனமையேயாகும்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை உத்தியோகத்தர்களின் நேரடி கண்காணிப்பு பிரதேச மட்டத்தில்இருந்தால் தான் வணிகக் கொள்ளைகளைத் தடுக்க முடியும். அதிகாரம் பரவலாக்கப்படுகின்ற இக்காலத்தில் பாவனையாளர் அதிகார சபையின் நிருவாகம் மாத்திரம் அதிகார குவிப்புக்கு உள்ளாக்கப்பட்டிருப்பது பாவனையாளர்களுக்கு இழைக்கப்படும் பெரும் அநீதியாகும்.

இவர்களது நியமனம் எந்த நோக்கத்திற்கு மேற்கொள்ளப்பட்டதோ அந்நோக்கம் சிதறடிக்கப்பட்டு, இவர்கள் ஊடாக மக்களுக்கு கிடைக்க வேண்டிய சேவை மறுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக மக்களின் முறைப்பாடுகள் தொடர்பில் இவ்வுத்தியோகத்தர்கள் நேரடியாக தலையீடு செய்ய முடியாதவாறு, மாவட்ட செயலகங்களில் முடக்கி வைக்கப்பட்டிருக்கின்றனர். இதனால் பாவனையாளர் அதிகார சபையின் நடவடிக்கைகள் அர்த்தமற்றதாக காணப்படுகின்றன. இதன் மூலம் பகற்கொள்ளை வியாபாரிகளுக்கு சாதகமான சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை, இவ்வுத்தியோகத்தர்கள் பலர் இதுவரை சேவையில் நிரந்தரமாக்கப்படாமல் இருந்து வருவதுடன் அடிக்கடி இடமாற்றத்திற்கும் உட்பட்டு வருவதன் காரணமாக அதிகமான பாவனையாளர் பாதுகாப்பு அதிகாரிகள் தமது பதவிகளை விட்டுச் சென்றுள்ளனர் எனவும் தெரிய வருகிறது.

ஆகையினால், பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அனைத்து புலனாய்வு உத்தியோகத்தர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படுவதுடன் அவர்களது சேவையை பிரதேச செயலக மட்டத்தில் முன்னெடுப்பதற்கு அவசர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என குறித்த கடிதங்களில் வலியுறுத்தியுள்ளோம்- என்றார்.

# மன்னார் அரச அதிபர் குழாம் சம்மாந்துறைக்கு கள விஜயம்



(காரைதீவு சகா)

சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வரும் சேதனை பசளை உற்பத்தியினை பார்வையிடுவதற்காக நேற்று கள விஜயத்தினை மேற்கொண்டு வருகை தந்த மன்னார் மாவட்ட அரச அதிபர் திருமதி.ஏ.ஸ்டான்லி டி மெல் ,மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ,திட்டமிடல் பணிப்பாளர்,பிரதம கணக்காளர் உற்பட ஏனைய பதவி நிலை உத்தியோகத்தர்களும் மற்றும் அம்பாரை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ்.எம்.ஸப்றாஸ் ,சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா, கணக்காளர்.,உதவி திட்டமிடல் பணிப்பாளர், தலைமைக்காரியாலய முகாமையாளர் ,திட்ட முகாமையாளர் நிரவாக கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவு உத்தியோகத்தா்களுடன் கள விஜயம் மேற்கொண்டனர்.

# கொரோனா 2 ஆம் கட்ட தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை

(ஹஸ்பர் ஏ ஹலீம்)



திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் இளைஞர்களுக்கான இரண்டாண் கட்ட கொரோனா தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை இடம் பெற்று வருகின்றன.நேற்றைய தினமும் (20) 21 வயது தொடக்கம் 29 வரையான இளைஞர் யுவதிகளுக்கு இத் தடுப்பு மருந்தின் இரண்டாவது டோஸ் ஏற்றப்படுகிறது. சிராஜ் முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் இத் தடுப்பு மருந்து ஏற்றும் பணி இடம் பெற்றது.

நேற்று(19) முதல் தடுப்பு மருந்தினை இளைஞர் யுவதிகள் ஆர்வமாக பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்குப்பல்கலைக்கழக கலைகலாசார பீட முதலாம் வருட மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்ச்சி

(மட்டக்களப்பு நிருபர்)

கிழக்குப்பல்கலைக்கழக கலைகலாசார பீடத்தின் 2019‰2020 கல்வியாண்டில் பதிவு செய்யப்பட்டுள்ள புதிய மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்ச்சி எதிர்வரும் 25.10.2021 ஆந் திகதி திங்கட்கிழமை தொடக்கம் மெய்நிகர் நேரலை (via zoom platform) ஊடாக ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. எனவே குறித்த கல்வியாண்டில் பதிவு செய்துள்ள மாணவர்கள் அனைவரும் இந் நிகழ்ச்சியில் தவறாது பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்வதுடன், இதுபற்றிய மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள https://esn.ac.lk/எனும் பல்கலைக்கழக இணையத்தளத்திற்குப் பிரவேசிக்குமாறும் அறியத்தருகின்றேன். என கிழக்கு பல்கலை கழக பதிவாளர் தெரிவித்துள்ளார்.

# மாவடி பேர்ல்ஸ் விளையாட்டு கழகத்தினால் பொது நூலகத்திற்கு நூல்கள் வழங்கி வைப்பு



நூருல் ஹுதா உமர்

மாவடிப்பள்ளி- மாவடி பேர்ல்ஸ் விளையாட்டு கழகத்தினால் 'கல்விக்கும் கரம் கொடுப்போம்' எனும் வேலைத் திட்டத்தின் கீழ் ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் பெறுமதியான நூல்களை நூலகங்களுக்கு அன்பளிப்பு செய்யும் முதலாம் கட்ட நிகழ்வு செவ்வாய்க்கிழமை கழகத்தின் தலைவர் ஏ.ஜே.எம். அஷ்ரப் பலாஹி அவர்களின் தலைமையில் மாவடிப்பள்ளி பொது நூலக வளாகத்தில் இடம் பெற்றது.

மாவடிப்பள்ளி பொது நூலகமானது பல வருடங்களாக இயங்கி வரும் வரலாற்றை கொண்டிருந்த போதும் தற்போது நூலகத்தில் போதுமான அளவு நூல்கள் இல்லாமையினால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தது. இந்த நிலையில் மாவடி பேர்ல்ஸ் விளையாட்டு கழகத்தினரின் முயற்சியினால் எச்.எம்.அர்ஷாத் அவர்களினதும் கழக உறுப்பினர்களினதும் நிதி உதவியின் மூலம் இந்தப் பொது நூலகத்திற்கான நூல்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் காரைதீவு பிரதேச சபை உறுப்பினர்களான எம்.என். எம். றணீஸ், எம். ஜலீல், மாவடிப்பள்ளி ஜும்மாப் பள்ளிவாசல் நம்பிக்கையாளர்சபை தலைவர் என். எம். மஹ்ரூப், மாவடிப்பள்ளி அல்-அஷ்ரப் மகா வித்தியாலய பிரதி அதிபர் ஏ.எல்.றஜாப்தீன், பாடசாலையின் முன்னாள் அதிபர் எம்.ஐ.எம். சைபுதீன் மற்றும் மாவடி பேர்ல்ஸ் விளையாட்டு கழகத்தின் போசகர்களான ஓய்வு பெற்ற ஆசிரியர் எம்.வை.மனாப், ஆசிரியர் எஸ்.எச்.யாக்கூப் ஹசன் மற்றும் பேர்ல்ஸ் விளையாட்டு கழக நிர்வாக உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.




# கிழக்கில் இன்று முதல் பாடசாலைகளில் உயர்தர மாணவர்களுக்கு கோவிட் தடுப்பூசி

(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

கிழக்கு மாகாணத்தில் கொரோனா நோயாளிகளின் தாக்கம் மற்றும் மரணங்களின் எண்ணிக்கையும் வெகுவாக குறைந்துள்ளதாக கிழக்குமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஆர்.எம் தௌபீக் தெரிவித்துள்ளார்

கிழக்குமாகாணத்தில் செப்டம்பர்மாதம் முதலாம் வாரத்தில் 4400 கொரோனா நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ள நிலையில் நூறு மரணங்கள் வரை பதிவாகியது இருந்தபோதிலும் அதிகளவாக ஒக்டோபர் முதலாம் திகதி 612 கொரோனா நோயாளிகளும் இருபத்தி இரண்டு மரணங்களும் மாத்திரம் பதிவானதுடன் 2ஆம் திகதி 400 நோயாளிகளிடம் காணப்பட்டுள்ளதாகவும் பதினோரு மரணங்கள் மாத்திரமே பதிவானதாக கிழக்குமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஆர். எம் தௌபீக் தெரிவித்தார்.

மேலும் கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் ஏனைய பகுதிகளிலும் கொரோனா தடுப்பு மருந்து வழங்கும் செயற்பாடு விரைவாக செயல்படுத்த பட்டுள்ளதுடன் 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கிழக்கு மாகாணத்தில் மாத்திரம் 90 வீதமானவர்களுக்கு கோவிட் தடுப்பு மருந்து செலுத்தப்பட்டு உள்ளதாகவும்

இம்மாதம் 26ஆம் திகதிக்கு பின்னர் 18 மற்றும் 19 வயதுடைய கல்விப் பொதுத் தராதர உயர்தர மாணவர்களுக்கு பைசர் தடுப்பு மருந்து வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் கல்விப் பொதுத் தராதர உயர்தர பாடசாலைகளில் இவ்வாறு தடுப்பு மருந்தினை பெற்றுக் கொள்ள முடியும் என ஏ.ஆர்.எம் தௌபீக் தெரிவித்தார்.



# வை. எம். எம். ஏ.பேரவையின் மீலாத் விழா



(இக்பால் அலி)

அகில இலற்கை வை. எம். எம். ஏ. பேரவையின் ஏற்பாட்டில் இலங்கை ஒலிப்பரப்புக் கூட்டுத்தானபனத்தின் அனுசரணையுடன் வருடா வருடம் நடத்தும் விசேட மீலாத் தின விழா அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் மண்டபத்தில் வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி தலைமையில் இடம்பெற்றது.

சுகாதாரவிதி முறைகளுக்கு இணங்க குறித்த எண்ணிக்கையிலான சர்வ மத தலைவர்கள் முக்கிய பிரமுகர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதன் நேரடி ஒலிபரப்பு வானொலியிலும் ஸம் சமூக வலைத்தளம் ஊடாகவும் நேரடி ஒலிரப்பப்பட்டது. இந் நிகழ்வில் பொதுச் செயலாளர் சாபிர் சவாத், பொருளாளர் இஹ்சான் ஹமீட், முன்னாள் துதுவரும் கலாசாரத் தவிசாளர் பௌசான் அன்வர் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். இதில் விசேட மீலாத் விசேட கண்காட்சியும். மௌலூத் வைபவமும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# பிறந்து 28 நாட்களில் குழந்தைகளை பாதிக்கும் 'மிஸ்' ஆபத்து என்கிறார் விசேட குழந்தை நல வைத்திய நிபுணர்

(வி.ரி.சகாதேவராஜா)

சிறுவர்களில் கொரனா தொற்றுக்கு பின்னர் ஏற்படுகின்ற Mis-C பற்றி முன்னர் பார்த்தோம். Mis-C யானது சிறுவர்களின் பல அங்கங்களில் பாதிப்பை ஏற்படுத்துவதை போன்றே Mis-C பிறந்து 28 நாட்களுக்குள்ளான பிள்ளைகளின் பல அங்கங்களில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இது ஆபத்தானது.

என்று கிழக்கு பல்கலைக் கழக மருத்துவ பீட சிரேஸ்ட விரிவுரையாளரும், மட்/போதனா வைத்தியசாலையின் விசேட குழந்தை நல வைத்திய நிபுணருமான வைத்தியகலாநிதி வைத்தியர் .விஜி திருக்குமார் தெரிவித்தார்.

சமகாலத்தில் குழந்தைகளைப்பாதிக்கும் 'மிஸ்சி' பற்றி அறிந்துகொள்வதற்கிடையில், 'மிஸ்என்' என்ற புதியவகைத் தொற்றும் தாக்கம் செலுத்த ஆரம்பித்துள்ளதாக இறுதியாகவந்த மருத்துவத்தகவல்கள் தெரிவிக்கின்றன. அதுபற்றி வைத்தியநிபுணரிடன் கேட்டபோது அவர் கூறியவை அது.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

MIS - N (Neonatal Multisystem Inflammatory Syndrome) என்பது அதன் விரிவாக்கம்..

இகொஎஜா - 19 தொற்றுக்கு உள்ளான தாயின் தொப்புள் கொடியின் மூலமாக கடத்தப்படுகின்ற பிறபொருள் எதிரி அல்லது நிணநீர் தொழிற்பாட்டின் பிறழ்வு செயற்பாடு சிறு பிள்ளைகளின் உடலின் பல அங்கங்களில் பிறந்து 28 நாட்களுக்குள் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இதன் மூலமாக பிள்ளைகளின். இதயம் பெரும்பாலான (90%) தாக்கத்தை (இதய தொழிற்பாடு இதய குழாய்கள்) ஏற்படுத்துகிறது.. நுரையீரல் சுவாசப் பிரச்சனைகள். காய்ச்சல். பாலூட்டலில் சிரமம். சிறுநீரக செயலிலப்புகல்லீரல் பிரச்சனைகள் பிள்ளை சோர்வாக காணப்படல் பிள்ளை மஞ்சளாகி காணப்படல் போன்றவற்றை அவதானிக்க முடிவதுடன் சிறு வீதமானவர்களில் உயிரிழப்பும் அவதானிக்கப்படுகிறது.

சிறு பிள்ளைகளில் குறிப்பாக 28 நாட்களுக்கு உட்பட்டவர்களின் உடல் நிலையில் மேலதிக கவனம் எடுத்து பார்ப்பதுடன் பிள்ளைகளின் உடல் நிலையில் ஏதேனும் அசௌகரியத்தை அவதானித்தால் உடனடியாக அரச வைத்தியசாலைகளை அணுகின்ற வேளையில் விசேட வைத்தியர்கள் காணப்படுகின்ற வைத்தியசாலைகளுக்கு உங்களை சிகிச்சைகளுக்கா அணுப்பி வைப்பார்கள். இவற்றுக்கான உரிய சிகிச்சைகள் காணப்படுகின்றன அவற்றை வைத்தியர்கள் உங்களுக்கு வழங்குவார்கள்.



# மாணவர்களின் கல்வியை கருத்தில் கொண்டு ஆசிரியர்கள் பாடசாலைக்கு திரும்ப வேண்டும்

( ஏ. எல்.எம்.ஷினாஸ்)



ஆசிரியர்கள் மாணவர்களின் கல்வியை கருதிக்கொண்டு போராட்டத்தை கைவிட்டு வழமைபோன்று பாடசாலையின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு திரும்ப வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன கல்விச் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கல்முனை பிராந்திய ஸ்ரீலங்கா பொதுஜன கல்வி சங்கம் ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று கல்முனை அலுவலகத்தில் நடைபெற்றது. இங்கு கருத்து தெரிவிக்கும்போதே சங்கத்தின் பொதுச் செயலாளர் எஸ். அற்புதராசா இந்த தகவலை வெளியிட்டார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

மாணவர்களின் கல்வி நிலை தற்போதைய சூழலில் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. கொவிட் தொற்றுநோய் காரணமாக எமது நாடு மாத்திரமல்ல உலக நாடுகள் அனைத்தும் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றன. இந்நிலையில் நாட்டை மேலும் நெருக்கடியான சூழலுக்குள் தள்ள முடியாது. போராட்டத்தின் மூலம் வெற்றியைப் பெற்றுக் கொள்வதிலும் பார்க்க நியாயமான காரணத்தை அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தையின் மூலம் நாம் எமது சம்பள அதிகரிப்பை பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஆசிரியர்களுடைய போராட்டம் நியாயமான போராட்டமாகும். கடந்த காலங்களில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயற்பாட்டுக்கு நாம் பூரண ஒத்துழைப்பு வழங்கினோம் எனினும் தொடர்ந்து விடாப்பிடியாக இருந்து கொண்டு எமது போராட்டத்தை முன்னெடுக்க முடியாது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களுடனான கலந்துரையாடலின்போது புதிய வரவு செலவுத் திட்டத்தில் எமக்கான தீர்வைப் பெற்றுத் தருவதாக அவர் உறுதியளித்துள்ளார். எனவே அரசாங்கத்தின் மீது நம்பிக்கை கொண்டு நாம் செயலாற்ற வேண்டும். அரச உத்தியோகத்தில் இருந்து கொண்டு அரசாங்கத்திற்கு களங்கம் ஏற்படும் வகையில் நாம் செயல்பட முடியாது. அரசாங்கம் எமக்கு சம்பளம் வழங்குகிறது. சுமார் இரண்டு ஆண்டுகள் பாடசாலை கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறாத சூழலிலும் அரசாங்கம் எமக்கு சம்பளம் வழங்கியதை நான் நினைவு கூறுகின்றேன். தற்போது மாணவர்கள் வீட்டு சூழலிலும் வெளியிலும் பெற்றோருக்கு பெரும் சவாலாக மாறி இருக்கிறார்கள். கற்றல் நடவடிக்கைகளில் இருந்து பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை .சாதாரண தரப் பரீட்சை, உயர்தரப் பரீட்சை , என பரீட்சைகளுக்கு மாணவர்களைத் தயார்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. எனவே மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் மீண்டும் (21) முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. ஆரம்ப நாளன்றே சகல ஆசிரியர்களும் பாடசாலைகளுக்கு செல்ல வேண்டும்.

கொரோனா தொற்றிலிருந்து நாட்டை மீட்பதற்கு அரசாங்கம் பல மில்லியன் ரூபா பணத்தினை செலவு செய்கிறது. பொருளாதார நெருக்கடி கூடிய ஒரு இக்கட்டான சூழலில் அரசாங்கம் பயணித்துக் கொண்டிருக்கிறது. எனவே அரசாங்கத்தின் செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மாணவர்களுடைய கல்வியில் நாம் அக்கறை கொண்டவர்களாக செயல்பட வேண்டும். அதற்கான வழியாக பாடசாலை இப்போது திறக்கப்பட்டிருக்கிறது. எனவே பாடசாலைகள் திறக்கப்பட்டதும் சக ஆசிரியர்களும் பாடசாலைக்கு சென்று மாணவர்களுடைய கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுவோம். என்று தெரிவித்தார். இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் ஸ்ரீலங்கா பொதுஜன கல்விச் சங்கத்தின் தலைவர் எஸ்.அரசரெத்தினம், பொருளாளர் எம். பரமேஸ்வரநாதன் ,கல்முனை பிராந்திய பொதுஜன பெரமுன கட்சியில் அமைப்பாளர் எஸ்.சாந்தலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# பாடசாலை மீளத்திறக்க வீதிகளில் பொது அறிவிப்பு





கொவிட் விடுமுறைக்குப்பிள்ளர் மீண்டும் இன்று (21)வியாழக்கிழமை பாடசாலைகளை ஆரம்பிப்பதற்காக நேற்று (20)புதன்கிழமை சம்மாந்துறை வலயத்தில் வீதிவீதியாக ஒலிபெருக்கிஅறிவித்தல் விடுக்கப்பட்டது. கூடவே துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன. வலயத்தின் கொவிட் அணிப்பொறுப்பாளரும் பிரதிக்கல்விப்ணிபபாளருமான எ.நசீர் தலைமையில் 3 கோட்டங்களிலும் ஒலிபரப்புச்செய்யப்பட்டபோது...

படங்கள் . வி.ரி.சகாதேவராஜா

# பாராளுமன்ற உறுப்பினர் ரமேஸ்வரன் வாழ்த்து

(தலவாக்கலை பி.கேதீஸ்)



இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையே பரஸ்பர ஒற்றுமையை வலுப்படுத்தும் வகையில் இன்றைய புனித வப் போயா தினத்தில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து இந்தியா குஷி நகருக்கு 100 பௌத்த பிக்குகளுடன் பயணம் மேற்கொண்டுள்ள விளையாட்டு துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளரும் தோட்ட வீடமைப்பு மற்றும் சமூதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் பிரதமரின் பெருந்தோட்ட பிராந்தியங்களுக்கான இணைப்பு செயலாளர் செந்தில் தொண்டமான் ஆகியோருக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிதிச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ரமேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில் இதன் மூலம் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான நேரடியான பரஸ்பர உறவு வலுவடைவதோடு மட்டுமல்லாமல் இலங்கையில் இருந்து புத்தகாயாவிற்கு தரிசனம் மேற்கொள்ளும் இலங்கையர்களுக்கும் நேரடியாக சென்று வரக்கூடிய வசதிகள் அமைத்து கொடுக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கையிலிருந்து இந்தியா நோக்கி பயணம் மேற்கொள்ளும் இந்த விமானம் குஷி நகரை அடைந்ததும் குஷி நகர் விமான நிலையத்தை திறந்து வைத்த இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் இந்த திறப்பு விழாவில் கலந்துகொள்ள விசேட விருந்தினர்களாக இலங்கையிலிருந்து பயணம் மேற்கொண்டுள்ள அனைவருக்கும் வாழ்த்துக்களை பகிர்ந்துக் கொள்கின்றேன். இந்த விமான நிலைய திறப்பு விழாவிற்கு இலங்கையிலிருந்து விசேட விருந்தினர்கள் அழைக்கப்பட்டிருப்பது எமது நாட்டிற்கு கிடைக்கப்பெற்ற பாரிய வரப்பிரசாதமாக அமைகின்றது என்றார்.

# மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதி விபத்து: ஒருவர் படுகாயம்

(ரக்ஸனா )

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியின் செட்டிபாளயத்தில் செவ்வாய்கிழமை (19) இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞன் ஒருவர் காயமடைந்துள்ளதாக களுவாஞ்சிகுடி பொலிசார் தெரிவித்தனர்.

டிப்பர் ரக வாகனம் ஒன்றுடன் மோட்டர் சைக்கிள் ஒன்று மோதியதிலேயே இவ்விபத்து சம்பவித்துள்ளதாக தெரியவருகின்றது. விபத்தில் மோட்டார்சைக்கிளில் பயணித்த இளைஞன் காயமடைந்த நிலையில் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் களுவாஞ்சிகுடி போக்குவரத்துப் பொலிசார் இஸ்த்தலத்திற்கு விரைந்து விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமுகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன்
உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை
கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள்
அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும்
பெறுமதியான பரிசில்கள் மற்றும்
அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார்
நிறுவனங்களுக்கு விசேட
விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து
அனுப்பப்படும் பொதிகளையும்
இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


Restaurant
GRÜNAU
Meier-Wiesen Str. 58
8064 Zürich
PIZZA NACH WAHL, TANDOORI, FISCH SPL.
BBQ GRILL, BIRIYANI SPL., CURRY GERICHTE,
PARTYSERVICE.
Bestellung Number
044 260 2222
079 563 2222
www.restaurant-grunau.ch
info@restaurant-grunau.ch
Uber Eats
TWINT